பொருள் 1

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.21787/2021/நுஹ2, நாள்.02.10.2021ன்வரிசை எண் 10–ல் இடைப்பாடி நகராட்சிக்குட்பட்ட தெருவிளக்குகள் இயக்கி பராமரித்தல் பணிகளை திறம்பட செய்திட போதுமானதாக பணியாட்கள் இல்லாத நிலையில் பணியாட்களை வெளிக்கொணர்வு முகமை மூலம் ஒப்பந்த அடிப்படையில் அமர்த்தும் கீழ்காணும் பட்டியலில் பொது வழிகாட்டு நெறிமுறைகளை வரப்பெற்றுள்ளது.இடைப்பாடி நகராட்சி 30 வார்டுகள் கொண்ட முதல் நிலை நகராட்சி ஆகும். மொத்த நகராட்சி பராப்பளவு 28.22 ச.கி.மீ மொத்த குடியிருப்புகளின் எண்ணிக்கை 16248 ஆகும்.மேலும்இந்நகராட்சி பகுதிகளில் உள்ள மொத்த தெருவிளக்குகளின் எண்ணிக்கைகள் 2558 ஆகும். அதில் ஒளிர் உமிழ் விளக்குகள் 543 மற்றும் ஒளிர் உமிழ் விளக்குகள் அல்லாத பிற வகையான விளக்குகள் 2015 உள்ளது.

| பணியின் விவரம் | தேவையான பணியாட்களின் அளவுகோல்கள் |
|---|---|
| ஒளிர் உமிழ் விளக்குகளை இயக்கி எரியூட்டி பராமரித்தல் | 1800 ஒளிர் உமிழ் விளக்குகளை (டுநுனு) இயக்கி எரியூட்டி பராமரித்தல்<br>மின் கம்பியாளர்–1<br>மின்கம்பி உதவியாளர்–1 |
| ஒளிர் உமிழ் விளக்குகள் அல்லாத பிற வகையான விளக்குகளை இயக்கி எரியூட்டி பராமரித்தல் | 600 ஒளிர் உமிழ் விளக்குகள் அல்லாத பிற வகையான விளக்குகளை இயக்கி எரியூட்டி பராமரித்தல்<br>மின் கம்பியாளர்–1<br>மின் கம்பிஉதவியாளர்–1 |

மேற்காணும் பட்டியலில் கண்டுள்ளவாறு இந்நகராட்சிக்குட்பட்ட தெருவிளக்குகள் இயக்கி பராமரித்தல் பணிகளை திறம்பட செய்திட பணியாட்களை வெளிக்கொணர்வு முகமை மூலம் ஒப்பந்த அடிப்படையில் மின் கம்பியாளர்–2 மற்றும் மின் கம்பிஉதவியாளர்–2 பணியமர்த்த மதிப்பீட்டுதொகை ரூ.13.15 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேலும், இந்நகராட்சிக்குட்பட்ட தெருவிளக்குகள் இயக்கி பராமரித்தல் பணிகளை திறம்பட செய்திட பணியாட்களை வெளிக்கொணர்வு முகமை மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த நிர்வாக அனுமதி பெறுவதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு திட்ட பிரேரணைகளை இணைத்து அனுப்பி மேல் நடவடிக்கை தொடரவும், மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்பகிறது.

அலுவலககுறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்கண்ட மேற்கொளவும், பணிக்கான செலவினைத் தொகையை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1829/2021/இ1)

பொருள் 2

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.21787/2021/நுஹ2, நாள்.02.10.2021ன் வரிசை எண் 8–ல் இடைப்பாடி நகராட்சிக்குட்பட்ட குடிநீர் வழங்கல் மற்றும் தொடர்புடைய கட்டமைப்புகளை இயக்கி பராமரித்தல் பணிகளை திறம்பட செய்திட போதுமானதாக பணியாட்கள் இல்லாத நிலையில் பணியாட்களை வெளிக்கொணர்வு முகமை மூலம் ஒப்பந்த அடிப்படையில் அமர்த்தும் கீழ்காணும் பட்டியலில் பொது வழிகாட்டு நெறிமுறைகளை வரப்பெற்றுள்ளது. இடைப்பாடி நகராட்சி 30 வார்டுகள் கொண்ட முதல் நிலை நகராட்சி ஆகும். மொத்த நகராட்சி பராப்பளவு 28.22 ச.கி.மீ மொத்த குடியிருப்புகளின் எண்ணிக்கை 16248 ஆகும்.மேலும்இந்நகராட்சி பகுதிகளில் உள்ள மொத்த மேல்நிலை தொட்டிகளின் எண்ணிக்கைகள் 26 ஆகும்.

| பணியின் விவரம் | தேவையான பணியாட்களின் அளவுகோல்கள் |
|---|---|
| நீரேற்று நிலையத்தை இயக்கி பராமரித்தல் | மின்னாளர்–4<br>பராமரிப்பு உதவியாளர்–3 |
| குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் இயக்கி பராமரித்தல் | மின்னாளர்–3<br>பராமரிப்பு உதவியாளர்–3<br>நீர் பகுப்பாய்வக உதவியாளர்–1 |
| குடிநீர் வடிகட்டி படுகை இயக்கி பராமரித்தல் | குடிநீர் வடிகட்டி படுகை இயக்குநர்–3 |
| குடிநீர்நீரேற்று நிலையம் இயக்கி பராமரித்தல் | மின்னாளர்–3<br>பராமரிப்பு உதவியாளர்–3 |
| பூஸ்டர் நிலையம் | பராமரிப்பு உதவியாளர்–3 |
| மேல்நிலை தொட்டிகள், தரைமட்ட தொட்டிகள் மற்றும் குடிநீர் பகிர்மான குழாய்கள் தொடர்புடைய பணிகள் | 1 டுடு வரை கொள்ளளவு கொண்ட தொட்டி 4 இருப்பிடத்திற்கு<br>பராமரிப்பு உதவியாளர்–1<br>1 டுடு முதல் 2 டுடுக்கு வரை கொள்ளளவு கொண்ட தொட்டி இருப்பிடத்திற்கு<br>பராமரிப்பு உதவியாளர்–1<br>2 டுடு முதல் 5 டுடுக்கு வரை கொள்ளளவு கொண்ட தொட்டி இருப்பிடத்திற்கு<br>பராமரிப்பு உதவியாளர்–2<br>5 டுடு க்கு வரை கொள்ளளவு கொண்ட தொட்டி இருப்பிடத்திற்கு<br>பராமரிப்பு உதவியாளர்–3 |
| பகிர்மான குழாய்கள் இல்லாத பகுதிகளில் லாரிகள் மூலம் குடிநீர் வழங்கல் | குடிநீர் வாகனம்–1<br>ஒட்டுநர்–1<br>துலக்குநர்–1 |

மேற்காணும் பட்டியலில் கண்டுள்ளவாறு இந்நகராட்சிக்குட்பட்ட தெருவிளக்குகள் இயக்கி பராமரித்தல் பணிகளை திறம்பட செய்திட பணியாட்களை வெளிக்கொணர்வு முகமை மூலம் ஒப்பந்த அடிப்படையில் மின்னாளர்–4, மற்றும் பராமரிப்ப உதவியாளர்–27 பணியமர்த்த மதிப்பீட்டுதொகை ரூ.87.85 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேலும், இந்நகராட்சிக்குட்பட்ட தெருவிளக்குகள் இயக்கி பராமரித்தல் பணிகளை திறம்பட செய்திட பணியாட்களை வெளிக்கொணர்வு முகமை மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த நிர்வாக அனுமதி பெறுவதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு திட்ட பிரேரணைகளை இணைத்து அனுப்பி மேல் நடவடிக்கை தொடரவும், மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்பகிறது.

அலுவலககுறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்கண்ட, பணிக்கான செலவினைத் தொகையை நகராட்சி குடிநீர் நிதியில் இருந்துமேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

<u>ந.க.எண்.1830/2021/இ1</u>

பொருள் 3

இடைப்பாடி நகராட்சி 30 வார்டுகளை கொண்ட முதல் நிலை நகராட்சி ஆகும். 2011–ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி 54823 ஆகும், தற்போதைய மக்கள் தொகை 58460 ஆகும்.இந்நகராட்சியின் மொத்த பரப்பளவு 28.22 சதுர கிலோ மீட்டர் கொண்டதாகும். இந்நகராட்சியில் 16248 குடியிருப்புகளும், 1612 வார்த்தக நிறுவனங்களும் உள்ளது. இதன்மூலம் நாள் ஒன்றுக்கு 14 மெட்ரிக் டன் அளவு திடக்கழிவுகள் சேகரிக்கப்பட்டு வருகிறது. பொது சுகாதாரம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் திடக்கழிவுகளை சேகரித்து முதன்மை சேகரிப்பு பணி மற்றும் முறைப்படி நுண் உரம் தயாரித்தல் பணி நடைபெற்று வருகிறது.

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–28 அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 21787/2021/EA2.நாள்.02.10.2021 வெளியிட்டுள்ள அளவு கோல் படி தூய்மை பணியாளர்கள் தேவையினை கீழ்க்கண்டவாறு கணக்கிடப்பட்டுள்ளது

## Fixation of workers and vehicles as per norms:

| ளுட. சூடி. | Details | Present position | Norms | Requirements | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | BOV | LCV | HCV | JCB | Bobcat | Clean liness Worker | Supervisor | Driver |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 1 | Door to Door colleciton through BOVs - (60% of houses - 16248÷100X60 = 9749) | 9749 houses | BOV - 1 S.W - 2 for 400 houses | **24** | **-** | **-** | **-** | **-** | **48** | **-** | **-** |
| 2 | Door to Door Collection through LCVs (40% of houses 16248÷100x40 = 6499) | 6499 houses | LCV - 1 Driver - 1 S.W - 2 for 1200 houses | **-** | **5** | **-** | **-** | **-** | **10** | **-** | **5** |
| 3 | Door to Door Collection in Commercial Buildings through LCVs (Total commercial & Industrial buildings - 1612) | 812 Buildings | LCV - 1 Driver - 1 S.W - 2 for 500 shops | **-** | **2** | **-** | **-** | **-** | **4** | **-** | **2** |
| 4 | Door to Door Collection in Commercial Buildings through HCVs (Total commercial & Industrial buildings - 1612) | 800 Buildings | LCV - 1 Driver - 1 S.W - 4 for 1000 shops | **-** | **-** | **1** | **-** | **-** | **4** | **-** | **2** |
| 5 | Street Sweeping | 30 wards | S.W 1 for each 2 wards | **-** | **-** | **-** | **-** | **-** | **15** | **-** | **-** |

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | Bio degredable Waste Process a) in MCC | 5 MCC | S.W 5 for 1 MCC | **-** | **-** | **-** | **-** | **-** | **25** | **-** | **-** |
| 7 | in OCC | 2 OCC | S.W 1 for 1 OCC | **-** | **-** | **-** | **-** | **-** | **2** | **-** | **-** |
| 8 | Dry waste Management in RRC | 1 | SW - 4 for 1 RRC | **-** | **-** | **-** | **-** | **-** | **4** | **-** | **-** |
| 9 | a) Daily Market | 1 | S.W 2<br>LCV 1<br>Driver 1 | **-** | **1** | **-** | **-** | **-** | **2** | **-** | **1** |
| | b) Weekly Market | 1 | S.W 2<br>HCV 1<br>Driver 1 | **-** | **-** | **1** | **-** | **-** | **2** | **-** | **1** |
| 10 | Bus stand “C” class | 1 | S.W 4<br>LCV 1<br>Driver 1 | **-** | **1** | **-** | **-** | **-** | **4** | **-** | **1** |
| 11 | Public Toilets | 35 | S.W 2 for each 4 Toilet | **-** | **-** | **-** | **-** | **-** | **18** | **-** | **-** |
| 12 | Parks | 3 | S.W 1 for each 1 Park | **-** | **-** | **-** | **-** | **-** | **3** | **-** | **-** |
| 13 | Cleaning of Bushes and waste removal | - | JCB - 1<br>Driver -1<br>S.W - 1 for entire municipality. | **-** | **-** | **-** | **1** | **-** | **1** | **-** | **1** |
| 11 | Silt removal | - | Bobcat - 1<br>Driver - 1 | **-** | **-** | **-** | **-** | **1** | **-** | **-** | **1** |
| 12 | Supervisors (Total Wards - 30) | - | One for every 2 wards | **-** | **-** | **-** | **-** | **-** | **-** | **15** | **-** |
| **Total** | | | | **24** | **9** | **2** | **1** | **1** | **142** | **15** | **13** |

மேற்கண்டுள்ள கணக்கிட்டின்படி இடைப்பாடி நகராட்சி 142 தூய்மை பணியாளர்கள் தேவைப்படுகின்றனர் தற்போது இந்நகராட்சியில் 55 நிரந்தர தூய்மை பணியாளர்கள், 4துப்புரவு பணி மேற்பார்வையளார்கள் மற்றும் 4 ஒட்டுநர் மட்டுமே பணிபுரிந்து வருகின்றானர். இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்ட பணிகள் சிறப்பாக செயல்பட நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள தினக்கூலி அடிப்படையில் 87 தூய்மை பணியாளர்கள் 11 துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் மற்றும் 8 ஒட்டுநர்கள் ஆகியோர்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்வதற்கு ஒப்பந்த புள்ளி கோரி மூன்று வருடங்கள் பணியில் ஈடுப்படுத்தவும், அதற்கான ஒரு வருடத்திற்கான செலவினம் ரூ.274.00 இலட்சத்தினை நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்ற அனுமதிக்குவைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

1. மன்ற அனுமதிக்கலாம்.
2. தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு தயார் செய்து அனுப்பியமைக்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண்.1816/2021/எச்1)**

பொருள்1

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டுகளில் நடைபெற உள்ள உள்ளாட்சி தேர்தல் 2021க்கு வாக்குசாவடி மையங்களை சீரமைத்தல், வாக்காளர் பட்டியல் தயாரித்தல், எழுது பொருட்கள் வாங்குதல், வாக்காளர் பட்டியல் அச்சு செய்தல், வாக்குசாவடி அலுவலர்களுக்கு ஊதியம் வழங்குதல், வாக்கு எண்ணும் மையங்கள் அமைத்தல் மற்றும் வாக்கு எண்ணும் அலுவலர்களுக்கு ஊதியம் வழங்குதல் ஆகிய பணிகளுக்கு உள்ளாட்சி தேர்தல் 2021க்கு உத்தேச தேர்தல் செலவினம் ரூ.20,00,000/– (இருபது இலட்சம்) நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு – மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.700/2021/சி1)

பொருள்2

இந்நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலைய ஐனுளுஆகூ திட்ட கடை எண்கள். 31,32,33,34,35,44 ஆகிய கடைகள் ஏலம் விடப்பட்டு 30.10.2021 உடன் மூன்றாண்டு காலம் முடிவடைவதால் அரசாணை (நிலை) எண்.92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.03.07.2007ல் தெரிவிக்கப்பட்டுள்ளாவாறு தற்போதைய வாடகையில் இருந்து 15% சதவீதம் உயர்வு செய்து 31,32,33,34,35,44 ஆகிய கடைகளுக்கு 01.11.2021 முதல் கீழ்க்கண்டுள்ளவாறு வாடகை நிர்ணயம் செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | கடையின் விபரம் | குத்தகைதாரர் பெயர் மற்றும் முகவரி | தற்போது செலுத்தி வரும் வாடகை ரூ | அரசாணை (நிலை) எண்.92, ந.நி.ம.கு.வ.துறை நாள்.03.07.2007 ன்படி 15 சதவீதம் வாடகை உயர்வு | 01.10.2021 முதல் செலுத்தப்பட வேண்டிய வாடகை (சேவைவரி உட்பட) |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1 | பேருந்து நிலையIDSMT திட்ட கடை எண்.31 | திரு.ந.வேலுசாமி 15/25ஹ சவுண்டம்மன் சாவடிதெரு, இடைப்பாடி | 7000 | 1050 | ரூ.8050/– GSTரூ1450/– மொத்தம் = 9500 /– |
| 2 | பேருந்து நிலைய IDSMT திட்ட கடை எண்.32 | திரு.சி.நாராயணன், 30 ஹ1, ஆலச்சம்பாளையம் வடக்குதெரு, இடைப்பாடி | 7000 | 1050 | ரூ.8050/– GSTரூ1450/– மொத்தம் = 9500 /– |
| 3 | பேருந்து நிலைய IDSMT திட்ட கடை எண்.33 | திரு.என்.சுப்பிரமணியம், 25 பவானிரோடு, இடைப்பாடி | 7000 | 1050 | ரூ.8050/– GSTரூ1450/– மொத்தம் = 9500 /– |
| 4 | பேருந்து நிலைய IDSMT திட்ட கடை எண்.34 | திரு.எம்.அண்ணாதுரை 53ஹ, கண்ணாரத்தெரு, இடைப்பாடி | 7000 | 1050 | ரூ.8050/– GSTரூ1450/– மொத்தம் = 9500 /– |
| 5 | பேருந்து நிலைய IDSMT திட்ட கடை எண்.35 | திரு.வை.அருண், ஹ97/56 தாவாந்தெரு, இடைப்பாடி | 7000 | 1050 | ரூ.8050/– GSTரூ1450/– மொத்தம் = 9500 /– |
| 6 | பேருந்து நிலைய IDSMT திட்ட கடை எண்.44 | திருமதி.எம்சந்திரா க/பெ.மணி, 19, கடைத்தெரு சந்து, இடைப்பாடி | 15000 | 2250 | ரூ.17250/– GSTரூ.3105/– மொத்தம்=20355 /– |

அலுவலககுறிப்பு

அரசாணை (நிலை) எண்.92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.03.07.2007ன்படி பழைய வாடகையில் இருந்து 15% சதவீதம் உயர்வு செய்ததை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.879/2021/பி4)

பொருள் 3

இடைப்பாடி நகராட்சி வார்டு எண்.11 ஜலகண்டாபுரம் ரோடு பகுதியில் அமைந்துள்ள இடைப்பாடி நகராட்சிக்கு சொந்தமான நவீன எரிவாயு தகனமேடையை அரசு ஆணை எண்.37, நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.30.01.2008 வழங்கியுள்ள உத்தரவின் படி 30.10.2014ம் தேதிய முதல் ஜீவ–ஆலயம் எரிவாயு தகன மேடை பராமரிப்பு அறக்கட்டளை மூலம் பராமரிப்பு பணி மேற்கொள்ளுவது சம்மந்தமாக இடைப்பாடி நகராட்சி 24 எண்ணிக்கை நிபந்தனைகளுடன் ஒப்பந்தப்பத்திரம் ஏற்படுத்தப்பட்டு பராமரிப்பு பணிக்கு அனுமதி வழங்கிஒப்படைக்கப்பட்டது.

மேற்கண்டஜீவ–ஆலயம் எரிவாயு தகன மேடை பராமரிப்பு அறக்கட்டளையின் மீது அவ்வப்போது புகார்கள் வரும் வண்ணம் உள்ளதால் நகராட்சிக்கு அவப்பெயர் ஏற்படும் நிலையில் உள்ளதால் பராமரிப்பு அனுமதியை 18.10.2021 முதல் ரத்து செய்து உத்தரவிடப்பட்டது.

மேலும், இந்நகராட்சிக்கு சொந்தமான நவீன எரிவாயு தகனமேடையை"அன்பில் ஜோதி அறக்கட்டளை"முன்வந்து மேற்காணும் பராமரிப்பு பணியை மேற்கொள்ள அனுமதி வழங்க கோரி கடிதம் வழங்கியுள்ளதால் கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு "அன்பில் ஜோதி அறக்கட்டளை" மூலம் நவீன எரிவாயு தகனமேடையை பராமரிப்பு பணிகள் செய்ய அனுமதி வழங்கி ஒப்படைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>நிபந்தனைகள்:–</u>

1. அமைக்கப்பட்ட எரிவாயு மயானம் மூன்று வருடங்களுக்கு அறக்கட்டளைக்கு குத்தகைக்கு வழங்கவும், மேலும் கால நீட்டிப்பு தேவையானால் பராமரிப்பு காலத்தினை மேலும் மூன்று ஆண்டுகளுக்கு நீட்டிப்பதற்கு நகர மன்றத்திற்கு அதிகாரம் உண்டு.
2. முதன் முதலில் பராமரிப்பு பொறுப்பு ஏற்ற நாளிலிருந்து மூன்று வருட காலத்திற்கு மட்டுமே எரிவாயு மயான பராமரிப்பை அறக்கட்டளை ஏற்றுக்கொள்ள அனுமதிக்கப்படும். கால நீட்டிப்பு தேவைப்படின் ஆறு மாத காலத்திற்கு முன்பாகவே அறக்கட்டளை தனது விருப்பத்தை தெரிவிக்க வேண்டும்.
3. நகராட்சி தேவைக்கு எப்போது திரும்ப ஒப்படைக்க கோரினாலும் எந்தவிதமான ஆட்சேபனையும் இன்றி எந்தவிதமான நஷ்ட ஈட்டுத்தொகை கோராமலும் எரிவாயு மயானத்தை இயக்கும் நிலையில் நகராட்சி வசம் ஒப்படைக்க அறக்கட்டளை கட்டுப்பட வேண்டும்.
4. மேற்படி இடத்தில் எந்தவிதமான கட்டுமானமும், நகராட்சியின் முன் அனுமதியின்றி கட்ட அறக்கட்டளை முற்படக்கூடாது.
5. மேற்படி இடம் மயானக் காரியங்களுக்கு மட்டுமே பயன்படுத்தப்படவேண்டும்.
6. சட்ட விரோதமான காரியங்கள் ஏதும் நடைபெற கண்டிப்பாக அனுமதிக்கப்படக்கூடாது
7. இறுதி சடங்கு நிகழ்ச்சிகள் தவிர அரசியல் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் உள்ளிட்ட வேறு எந்தவிதமான நிகழ்ச்சிகளுக்கும் அவ்விடத்தை அறக்கட்டளை கண்டிப்பாக பயன்படுத்தக் கூடாது.
8. ஒலி, ஒளி பெருக்கிகளை அறக்கட்டளை பயன்படுத்தக்கூடாது.

9. இந்த இடத்தை பயன்படுத்துவது சம்பந்தமாக நகராட்சி/ அரசு நிர்வாகம் அவ்வப்போது வகுக்கும் விதிமுறைகளுக்கும், ஆலோசனைகளுக்கும் அறக்கட்டளை கட்டுப்படவேண்டும்.
10. குறைந்த பட்சம் பராமரிப்பு காலம் மூன்று ஆண்டுகள் என்பதை நகராட்சி திருத்த விருப்பப்பட்டால் மேலும் நீடித்துக் கொள்ளவோ அல்லது குறைத்துக் கொள்ளவோ அறக்கட்டளை சம்மதம் தெரிவிக்க வேண்டும்.
11. அறக்கட்டளை பராமரிப்பை நிறுத்திக் கொள்ள விரும்பினால் நகராட்சிக்கு ஒரு வருட காலத்திற்கு முன்பே அறிவிப்பு முறையாக வழங்க வேண்டும்.
12. எரியூட்டப்படும் சடலத்திற்கு வசூலிக்கப்படும் தொகையினை நிர்வாக குழு அவ்வப்பொழுது நிர்ணயிப்பதுடன் அத்தொகையில் நகராட்சிக்கு செலுத்த வேண்டிய பங்குத் தொகையினை நிர்வாக குழு அவ்வப்பொழுது நகராட்சி கருவூலத்தில் செலுத்தப்பட வேண்டும்.
13. மூன்றான்டு காலத்திற்குள் பராமரிப்பு ரத்து செய்யப்பட்டால் எரிவாயு மாயன மண்டபத்தில் நிறுவப்பட்டுள்ள மயானத்து கருவிகள் மற்றும் உபகரணங்கள் நல்லமுறையில் செயல்படும் நிலையில் நகராட்சியிடம் ஒப்படைக்க வேண்டும்.
14. மேற்படி இடத்திலுள்ள பொருட்கள் ஏதேனும் களவாடப்பட்டிருந்தாலோ அல்லது சமூக விரோதிகளால் சேதம் விளைவிக்கப்பட்டிருந்தாலோ அறக்கட்டளை பொறுபேற்க வேண்டும்
15. பராமரிப்புக் காலத்தில் கணக்குகளை ஒவ்வொரு நிதியாண்டும் முடிந்தவுடன் அடுத்த ஒருமாத காலத்திற்குள் பட்டய கணக்காளர் (சார்ட்டர்டு அக்கவுண்டன்ட்) மூலமாக தணிக்கை செய்ய வேண்டும். மேலும் நகராட்சி உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை தணிக்கையாளரின் மூலம் முறையாக கால முறைப்படி தணிக்கைச் சான்று பெற வேண்டும்.
16. நவீன எரிவாயு மயானத்தில் எரியூட்டப்படும் சடலத்துக்கு அறக்கட்டளையால் வசூலிக்கப்படும் தொகையில் 20 சதவீத தொகையை நகராட்சிக்கு உரிய கட்டணமாக நகராட்சி கருவூலத்தில் மாதாமாதம் முதல்வாரத்தில் செலுத்தப்பட வேண்டும்
17. நவீன எரிவாயு மயானத்தை பராமரிப்பதற்கு நகர்மன்றத்தால் ஏற்படுத்தப்படும் உபவிதிகளுக்கு அறக்கட்டளை கட்டுப்படவேண்டும்
18. எரிவாயு மயானத்தைப் பராமரிப்பதற்கான அனைத்து முடிவுகளும் அதற்கென அமைக்கப்படும் கீழ்கண்ட நிர்வாக குழு (Administrative Committee) முடிவு செய்யும்.
19.

எரிவாயு மயான நிர்வாக குழு

| | | | |
|---|---|---|---|
| 1. | அறக்கட்டளை தலைவர் (ஆயயேபபைே கூசநளவநந) | .. | தலைவர் |
| 2. | தனி அலுவலர் (ம) நகராட்சி ஆணையாளர் | .. | துணைத் தலைவர் |
| 3. | நகராட்சி பொறியாளர் | .. | செயலாளர் |
| 4. | நகராட்சி சுகாதார அலுவலர் | .. | செயல் உறுப்பினர் |
| 5. | நகராட்சி உதவி பொறியாளர் | .. | உறுப்பினர் |
| 6. | நகராட்சி நகர அமைப்பு ஆய்வர் | .. | உறுப்பினர் |
| 7. | எரிவாயு மயான அறக்கட்டளை செயலர் | .. | உறுப்பினர் |
| 8. | மேலாளர் | .. | உறுப்பினர் |

20. நவீன எரிவாயு மயான நிர்வாகக்குழு நிர்ணயிக்கும் தொகையை மட்டுமே எரியூட்டப்படும் சடலத்துக்கு கட்டணமாக வசூலிக்கப்பட வேண்டும். எரிபொருள், குடிநீர் கட்டணம், மற்றும் மின் கட்டணம் செலவினத்தை அறக்கட்டளை ஏற்றுக்கொள்ள வேண்டும். பராமரிப்புக்கு ஆகும் செலவினத்தை பொறுத்து நகராட்சியும் நவீன எரிவாயு மயான அறக்கட்டளையும் சேர்ந்து நகராட்சி நிதிநிலை பாதிக்காத வகையில் வசூலிக்கும் கட்டணத்தை மறு நிர்ணயம் செய்து வசூலிக்க வேண்டும்.
21. ஜாதி, மத, இன வேறுபாடின்றி அனைவரும் பயன்பெறும் வகையில் எரிவாயு மயானமாக பயன்படுத்திட வேண்டும்.
22. எரிவாயு மயானத்தைச் சுற்றி உள்ள தோட்டத்தை பராமரித்தல், செடிகளுக்கு தண்ணீர் ஊற்றுதல், காவல் அரண் அமைத்தல் ஆகிய செலவினங்களை எரிவாயு மயான அறக்கட்டளை ஏற்க வேண்டும்.

23. மேலே 1 முதல் 21 வரையில் உள்ள நிபந்தனைகளில் எந்தவொரு நிபந்தனையாவது மீறப்பட்டால் வழங்கப்பட்ட அனுமதி உடன் இரத்து செய்யப்படும்.
24. சடலத்தை மின் மயானத்திற்கு கொண்டு வருவதற்கு தேவையான வாகனம் அறக்கட்டளையால் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இதற்கான கட்டணம் நிர்வாக குழு முடிவு செய்யும்.
25. எரிவாயு இயக்குதல், பராமரித்தல், காவல் காத்தல் போன்ற பணிகளுக்கான பணியாளர்கள் எரிவாயு பராமரிப்பு அறக்கட்டளையினால் ஏற்படுத்தப்பட்டு அதற்கான செலவினத்தையும் அறக்கட்டளையே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

அலுவலககுறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இந்நகராட்சிக்கு சொந்தமான நவீன எரிவாயு தகனமேடையை"அன்பில் ஜோதி அறக்கட்டளை" மூலம் பராமரிப்பு பணியை மூன்று வருட காலத்திற்கு மட்டுமே மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்1696/21/இ2)

பொருள்4

இந்நகராட்சிக்கு சொந்தமான வாரசந்தையில் கட்டப்பட்டு காலியாக உள்ள IGFF திட்ட கடை எண்.4,12 ஆகிய இரு கடைகளுக்கு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 08.10.2021ந் தேதி கோரப்பட்டது. மேற்படி கடைக்கு ஏலம் கோர எவரும் முன்வராத நிலையில் கடை எண்.4க்கு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும், கடை எண்.12க்கு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதன் ஒப்பு நோக்குப்பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | கடையின் விபரம் | உச்ச ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கேள்வி கோரியவர்களின் பெயர் மற்றும் முகவரி | உச்ச ஏலக்கேள்வி | உச்ச ஒப்பந்தப்புள்ளி கேள்வி |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | வாரசந்தை IGFF கடை எண்.4 | வீ.கார்த்திகா த/பெ.வீரமணி, பவானிரோடு மேற்குதெரு, இடைப்பாடி | – | ரூ1700/– |
| 2 | | திரு.சி.சிவராமன் த/பெ.சின்னபையன், தாவான்தெரு காட்டுவளவு, இடைப்பாடி | – | ரூ.1200/– |
| 1 | வாரசந்தை IGFF கடை எண்.12 | வீ.கவிப்பிரியா த/பெ.வீரமணி, பவானிரோடு மேற்குதெரு, இடைப்பாடி | – | ரூ1710/– |
| 2 | | திரு.சி.சிவராமன் த/பெ.சின்னபையன், தாவான்தெரு காட்டுவளவு, இடைப்பாடி | – | ரூ.1200/– |

அலுவலககுறிப்பு

அ) வாரசந்தை IGFF கடை எண்.4 க்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளி கேள்விகளில் வரிசை1ல் கொடுத்துள்ள வீ.கார்த்திகா த/பெ.வீரமணி என்பவரின் ஒப்பந்தப்புள்ளி கேள்வியானது மற்ற ஒப்பந்தப்புள்ளி கேள்வியை விட அதிகமாக உள்ளது. இக்கடை அமைந்துள்ள பகுதியானது மக்கள் நடமாட்டம் இல்லாத பகுதியில் அமைந்துள்ளதால் ஏலம் எடுத்த குத்தகைதாரர்களால் கடையினை தொடர்ந்து நடத்த முடியாமல் கடையினை நகராட்சி வசம் திருப்பி ஒப்படைத்து வருகிறார்கள். இதனால் நகராட்சிக்கு பெறும் நிதியிழப்பு ஏற்படுவதால் மேற்படி நிதியிழப்பை

கருத்தில் கொண்டு கடை எண்.4க்கு பெறப்பட்ட உச்ச ஒப்பந்தப்புள்ளி கேள்வியை ஏற்பது குறித்து மன்றம் முடிவு செய்யலாம்.

ஆ) வாரசந்தைஐமுகுகு கடை எண்.12க்கு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி கேள்விகளில் வரிசை எண்.1ல் உச்ச ஒப்பந்தப்புள்ளி கேள்வி கோரிய வீ.கவிப்பிரியா த/பெ.வீரமணி என்பவரின் உச்ச ஒப்பந்தப்புள்ளி கேள்வியானது மற்ற உச்ச ஒப்பந்தப்புள்ளி கேள்வியைவிட அதிகமாக உள்ளது. மேலும் இக்கடை அமைந்துள்ள பகுதியானது மக்கள் நடமாட்டம் இல்லாத பகுதியில் அமைந்துள்ளதால் குத்தகைக்கு எடுத்துள்ள குத்தகைதாரர்களால் போதுமான வியாபாரம் இன்றி நஷ்டம் ஏற்படுவதால் நகராட்சி வசம் கடையினை திருப்பி ஒப்படைத்து வருவதால் நகராட்சிக்கு பெரும் நிதியிழப்பு ஏற்படுவதாலும் மேற்கண்ட கடைக்கு பலமுறை ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரியும் எவரும் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோர முன் வருவதில்லை. எனவே மேற்படி கடை எண்.12க்கு பெறப்பட்ட உச்ச ஒப்பந்தப்புள்ளி கேள்வியை ஏற்பது குறித்து மன்றம் முடிவு செய்யலாம்.

இ)அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று உச்ச ஒப்பந்தப்புள்ளி கேள்விதாரருக்கு 01.11.2021 முதல் கடை எண்.4 மற்றும் கடை எண்.12.யை ஒப்படைப்பு செய்தமைக்கும் மன்றம் அங்கீகாரம் வழங்கலாம்.

(ந.க.எண்.462/2018/பி4)

பொருள்5

இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவு தூய்மை பணியாளர்கள் மற்றும் ஒட்டுநர்களுக்கு 2021 – 2022 ம் ஆண்டுக்கு சீருடைகள் வாங்கி வழங்க வேண்டியுள்ளதால் அதற்கான உத்தேச செலவினம் ரூ.3.00 லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு – அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1846/2021/எச்1)

பொருள்6

இந்நகராட்சி சொந்தமான ஆண்டு குத்தகை இனமான வாரசந்தைக்கு 08.10.2021ந் தேதி ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்படி வாரசந்தைக்கு ஏலம் கோர எவரும் முன்வராத நிலையில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றதன் ஒப்பு நோக்குப்பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியவர்களின் பெயர் மற்றும் முகவரி | உச்ச ஏலக் கேள்வி | உச்ச ஒப்பந்தப்புள்ளி கேள்வி |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1) | திரு. நு.ரு. நாராயணன்<br>த/பெ.பொரப்பாகவுண்டர்,<br>எல்லக்காவலசு,<br>ஆலச்சம்பாளையம், இடைப்பாடி | – | 625500/– |
| 2) | திரு.எஸ்.கோவிந்தன்,<br>த/பெ.சித்தகவுண்டர்,<br>30ஹ, ஆலச்சம்பாளையம்,<br>இடைப்பாடி | – | 618000/– |

அலுவலககுறிப்பு

1) பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளி கேள்விகளில் வரிசை எண்.1ல் திரு.நு.ரு.நாராயாணன் என்பவபரின் உச்ச ஒப்பந்தப்புள்ளி கேள்வியானது மற்ற ஒப்பந்தப்புள்ளி கேள்வியைவிட அதிகமாக உள்ளது.

2) வாரசந்தை மூன்றாண்டு சராசரி தொகை ரூ.983580/– தற்போது பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி உச்ச கேள்வி தொகை ரூ.625500/– பெறப்பட்டுள்ளது. மேலும் வாரசந்தை தொடர்ந்து நடைபெற்றாலும் வசூல் செய்யும் தொகையை விட வசூல் செய்யும் பணியில் ஈடுபடும் பணியாளர்களின் ஊதியம் தோராயமாக நாள் ஒன்றுக்கு ரூ.18300/– வாரசந்தையில் வசூல் செய்த தொகை ரூ.11105/– மேலும், கொரானா நோய் தொற்று பரவல் காரணமாக வாரச்சந்தைக்கு வரும் கடைகளும், வருகை தரும் மக்களும் குறைந்த விட்டது. மேலும் மக்களுக்கு தேவையான காய்கறிகள் நடமாடும் வாகனம் மூலம் வீடுகளுக்கே சென்று வருவதால் வாரசந்தை வரும் மக்களும் வியாபாரிகளும் குறைந்து காணப்படுகிறது. மேலும் 12.05.2021 முதல் வாரசந்தை மூடப்பட்டுள்ளதால் தற்போது திறந்தாலும் கொரானா நோய் பரவல் தடுத்தல், சமூக இடைவெளி கடைபிடித்தல் போன்ற வழி காட்டுதல்படி, நடைபெற அனுமதிக்கப்பட்டாலும் முறையாக வாரசந்தை நடைபெற சில மாதங்கள் ஆகலாம். தற்போது பொதுசுாதாரப்பிரிவில் மெகா வடிகால் தூய்மை திட்டம் ளுகூஆ விழிப்புணர்வு திட்டம். டெங்கு நோய் பரவல் தடுத்தல், மெகா தடுப்பூசி திட்டம் என பல பணிகள் அடுத்தடுத்து செய்து வருவதாலும், வருவாய் பிரிவில் தேர்தல் பணி, வசூல் பணிகள் தீவிரம் காட்ட வேண்டியுள்ளதாலும் தொடர் நிதிஇழப்பை தவிர்க்கும் பொருட்டு வரப்பெற்ற உச்ச ஒப்பந்தப்புள்ளியை பரிசீலனை செய்து ஏற்பது குறித்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

(ந.க.எண்.2627/2020/பி4)

பொருள் 7

இடைப்பாடி நகராட்சியில் பணி மேற்கொள்ளும் ஒப்பந்ததாரர்கள் மற்றும் சப்ளையர்களின் பில்பட்டியலில் பிடித்தம் செய்யப்படும் IT, TDS வருமானவரி அலுவலகத்திற்கு செலுத்தப்பட்டு ஒவ்வொரு காலாண்டும் திரு.எம்.பாலு , ஆடிட்டர், சேலம் அவர்களின் மூலம் சிட்டா தாக்கல் செய்யப்பட்டு வருகிறது.

2020–2021ம் நான்காவது காலாண்டு மற்றும் 2021–2021 முதல் மற்றும் இரண்டாம் காலாண்டு ஆகிய மூன்று காலாண்டுக்கு ரிட்டன் தாக்கல் செய்யப்பட்டமைக்கு தொகை ரூ6765/– வழங்க கோரி பில்பட்டியல் வரப்பெற்றுள்ளது.மேற்படி தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்படி தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு –மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்382/2019/பி1)

பொருள் 8

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள அனைத்து சாலைகளையும் அளவிடு செய்து Road Ledger மற்றும் Map தயார் செய்து 10–09–2021க்குள் சமர்பிக்குமாறு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம். அவர்களின் கடிதம் ந.க.எண் 3742/2021/பி1, நாள் 31–08–2021 அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்துஇந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள அனைத்து சாலைகளையும் அளவிடு செய்து சுடியன டுநனபநச மற்றும் ஆயயீ தயார் செய்யப்பட்டு 08–10–2021 அன்று நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னைஅவர்களிடம் சமர்பிக்கப்பட்டதற்கு ஆன செலவான தொகை ரூ.39,592/–ஐ இந்நகராட்சி உதவிப்பொறியாளர் திரு. கிஷோர்குமார்சிங்அவர்களுக்குதெகையை வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மன்ற முன் அனுமதி பெற்று மேற்கண்ட பணிகளுக்கு தொகை வழங்கியதை திரு. கிஷோர்குமார் சிங் அவர்களுக்கு வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் 1848/2021/இ1)

பொருள் 9

இந்நகராட்சிக்குட்பட்ட 30 வார்டுகளில் உள்ள Water Supply House Service Connection-யை சர்வே செய்து ஒவ்வொரு HSC Covered, Uncovered Household–யை ஒவ்வொரு Ward Map–களில் Mark செய்ததற்கும் மற்றும் Administrative Map, Water Bodies, Water Supply Distribution Map, Google Map ஆகியவற்றைதயார் செய்யப்பட்டு 13–10–2021 அன்று நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னைஅவர்களிடம் சமர்பிக்கப்பட்டதற்கு ஆன செலவான தொகை ரூ.49,896/–ஐ இந்நகராட்சி உதவிப்பொறியாளர் திரு. கிஷோர்குமார்சிங்அவர்களுக்குதெகையை வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மன்ற முன் அனுமதி பெற்று மேற்கண்ட பணிகளுக்கு தொகை வழங்கியதை திரு. கிஷோர்குமார் சிங் அவர்களுக்கு வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்:1847 /2021/இ1)

பொருள் 10

இந்நகராட்சி அலுவலகத்திற்கு புதியதாக வாங்கப்பட்ட ஈப்பு வாகனம் எண்.கூரூ52சு1779க்கு 30000 கி.மீட்டர் அளவி கடந்துவிட்டதால் வாகனத்தை சர்வீஸ் மற்றும் இதர பணிகள் செய்ய ளுமுளு ஆட்டோ மொபைல்ஸ், சேலம் நிறுவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டு வரப்பட்டது. மேற்காணும் சர்வீஸ் பணியில் தொகை ரூ.8303/– என்னால் வழங்கப்பட்டது எனவும் மேற்காணும் தொகையை எனக்கு வழங்குமாறு பார்வையில் காணும் திரு.கே.பெரியசாமி, ஈப்பு ஒட்டுநர், இடைப்பாடி நகராட்சி அவர்களின் விண்ணப்பத்தில் கோரியுள்ளார்.

எனவே, மேற்கண்ட பணியை அவசரம் அவசியம் கருதி மேற்கொண்டு செலவு தொகை ரூ.8303/–யைளுமுளு ஆட்டோ மொபைல்ஸ், சேலம் நிறுவனத்திற்கு வழங்கியதால், மேற்காணும் தொகையை இந்நகராட்சி ஈப்பு ஒட்டுநர், திரு. கே.பெரியசாமி, அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு

அலுவலககுறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்கண்ட செலவு தொகை ரூ.8303/–யை தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்கண்ட செலவு தொகையை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள் 11

இடைப்பாடி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மண் சாலைகளை தார்சாலை மற்றும் பேவர்பிளாக் சாலைகளாக மாற்றி அமைத்தல் பணிக்கு மதிப்பீடு ரூ.197.00 இலட்சத்திற்கு 29 எண்ணிக்கை பணிகளை கலைஞர் நகர்புற மேம்பாட்டுத்திட்டம் 2021–2022 கீழ் மேற்க்கொள்ள அரசின் முழு மான்யமாக நிதி ஒதுக்கீடு வழங்கக் கோரியும், நிர்வாக அனுமதி வழங்கக்கோரியும், திட்டபிரேரணை தயார் செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பி நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு பெற மன்றத்தின் அனுமதிக்கும் ஒப்புதலுக்கும்.

<u>அலுவலககுறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. புதிய சாலைகளை அமைத்தல் பணிக்கு கலைஞர் நகர்புற மேம்பாட்டுத்திட்டம் 2021–2022ம் ஆண்டின் கீழ் அரசின் நிதியுதவி மற்றும் நிர்வாகஅனுமதி பெற்று மேற்காணும் பணியை மேற்கொள்ளவும், கூடுதலாகும் செலவினத் தொகையை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்1603/2021/இ2)